## DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE PRINCIPAL ASSISTANT SESSIONS JUDGE, KANCHEEPURAM

| | |
|---|---|
| Sessions Case No | SC.No. 57/2013 |
| Primary Register Case No; | |
| Deposition of Witness for | Prosecution PW - 10 |
| | Defence |
| | Court |
| Name | T.கண்ணன் |
| Father's Name | த.C. தருக்கிராம் |
| Village | |
| Taluk | காவல் துணை கண்காணிப்பாளர் |
| Caste | தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகம் |
| Calling | ஊனமாஞ்சேரி. |
| Regligion | கிறிஸ்டியன் |
| Age | 59 |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 03rd day of February 2026.

3/2/26
Signature of Witness

Name of the Interpreter: Tmt. Eswari, Head Clerk

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 03rd day of February 2026.

3/2/26
Signature of Interpreter

## முதல் விசாரணை

நான் தற்பொழுது தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகம் ஊனமாஞ்சேரியில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2012 ஆம் ஆண்டு வாலாஜாபாத் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பொறுப்பேற்ற போது வாலாஜாபாத் காவல் நிலைய குற்ற எண். 335/2012 இதச பிரிவுகள் 341, 324 மற்றும் 307 வின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டிருந்ததை அந்த வழக்கு கோப்பினை நான் மேல்விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். எனக்கு முன்பிருந்த காவல் ஆய்வாளர் திரு சௌந்தரராஜன் இவ்வழக்கில் புலன் விசாரணை மேற்கொண்டு சாட்சிகள் வள்ளி, கணேசன், சிவக்குமார், ராஜமாணிக்கம், நளினி மற்றும் சத்தியராஜ் ஆகியோர்களை விசாரணை செய்து அவர்களின் வாக்குமூலங்களை பதிவு செய்து வைத்திருந்த ~~அதனை நான்~~ சாட்சிகளை நான் ~~அவர்களை~~ மீண்டும் விசாரணை செய்தபோது அதே சங்கதிகளை என்னிடம் சொன்ன காரணத்தினால் நான் மறு வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. பின்பு நான் இவ்வழக்கில் காயப்பட்ட சாட்சியான அ.சா.2 கணேசன் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ரமணிகாந்த், காயச்சான்று வழங்கிய மருத்துவர் சங்கரலிங்கம் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து அவர்கள் வழங்கிய காயத்சான்றிதழ்களை நான் பெற்றேன். முதல் புலன் விசாரணை அதிகாரி ஆய்வாளர் சௌந்தர்ராஜன் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட TN 21 AL 2171 மற்றும் TN 20 AQ 5765 என்ற இருசக்கர வாகனங்களை கைப்பற்றி உள்ளார்.அந்த TN 21 AL 2171 பதிவெண் கொண்ட இருசக்கர வாகனம் சா.பொ.2 ஆகும். அந்த TN 20 AQ 5765 பதிவெண் கொண்ட இருசக்கர வாகனம் சா.பொ.3 ஆகும். அந்த இரண்டு வாகனங்களையும் ஆய்வாளர் படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளார். அதன்பிறகு இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த ~~மற்றும்~~ உதவி காவல் ஆய்வாளரை விசாரித்து வாக்குமூலம் பெற்றேன். என்னுடைய விசாரணையின் முடிவில் எதிரிகள் மீது இதச பிரிவுகள் 341, 324 மற்றும் 307 உ/இ 34 வின் கீழ் எதிரிகள் மீது 30.01.2013 அன்று நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல்செய்தேன்.

3/2/2026

## எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை

28.07.2012 அன்று இந்த வழக்கை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். அ.சா.8 மருத்துவர் ரமணிகாந்த் என்னுடைய விசாரணையின் போது அ.சா.2 கணேசனை அவரை அடையாளம் தெரியாத சில நபர்கள் தாக்கியதாக மருத்துவரிடம் தெரிவித்து அதன் அடிப்படையில் விபத்து பதிவேட்டில் பதிவு செய்ததாக சொல்லி உள்ளார். மருத்துவரை எந்த தேதியில் விசாரணை செய்தேன் என்று விபரம் அவருடைய வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அ.சா.6 மருத்துவர் சங்கரலிங்கம் என்னுடைய விசாரணையின் போது 09.06.2012 அன்று அ.சா.2 கணேசனுக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்றளித்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.6 அதுபோல் அ.சா.6 ஆசா இரண்டு கணேசனுக்கு இடது பக்க தாடையில் 12 x 5 x 3 cm அளவு கொண்ட கிழிந்த காயம் இருந்ததாகவும் இடது தோள்பட்டையில் ஆறு என்று 15x 10 x 6 cm அளவு கொண்ட கிழிந்த காயம் இருந்ததாகவும் மேலும் 10 x 5 x 2 cm அளவு கொண்ட கிழிந்த காயம் தலையில் மண்டை ஓடு தெரியும் வரையில் காணப்பட்டதாகவும் அ.சா.2க்கு ரத்தப்போக்கு ஏற்பட்டு வெளிர்ந்த நிலையில் காணப்பட்டதாகவும் என்னுடைய விசாரணையில் சொல்லி உள்ளாரா என்றால் இல்லை. ஆனால் விபத்து பதிவேட்டில் இதனை பதிவு செய்ததாக குறிப்பிட்டு சொல்லியுள்ளார். நான் மருத்துவர் கிடையாது என்றால் சரிதான். அ.சா.6 ~~சந்திரசேகர்~~ மருத்துவர் சங்கரலிங்கம் அ.சா.2 கணேசனுக்கு இடது பக்க தாடையில் செல்லும் ரத்த குழாய் மற்றும் முக நரம்பு அறுபட்டு தடைப்பட்டதாக குறிப்பிட்டு சொல்லி உள்ளாரா என்றால் இல்லை. இடது பக்கத்தாடையில் எலும்பு முறிவு ஏற்பட்டதாக என்னுடைய விசாரணையில் சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. அ.சா.2 கணேசன் இரண்டு முறைக்கு மேல் குண்டர் தடுப்பு காவலில் சிறையில் அடைக்கப்பட்டவர் என்றும் அவர் மேல் பல வழக்குகள் நிலுவையில் இருந்து வந்தது என்றால் சரிதான். ஏனென்றால் அவர் ஒரு சாராய வியாபாரி ஆவார். சா.பொ.2 மற்றும் 3 இருசக்கர வாகனங்கள் எந்த இடத்தில் வைத்து எப்பொழுது கைப்பற்றப்பட்டது என்ற

3/2/2026

3/2/2026

விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அந்த இரண்டு இருசக்கர வாகனங்களும் இதுநாள் வரையிலும் நீதிமன்ற உத்தரவின் பெயரில் காவல் நிலைய காவலில் தான் உள்ளது என்றால் வழக்கு கோப்பினை பார்வையிடும் பொழுது அவ்வாறுதான் தெரிய வருகின்றது. சா.பொ.2 மற்றும் 3 வாகனங்களுக்கும் இந்த வழக்கிற்கும் ஆஜர் எதிரிகளுக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எதிரிகளை அடையாளம் காண அடையாள அணிவகுப்பு எதுவும் நான் நடத்தவில்லை என்றால் சரிதான். அ.சா.2 கணேசன் ஒரு சாராய வியாபாரி என்ற காரணத்தினாலும் அவருக்கு வாலாஜாபாத் காவல் நிலையத்தில் நிறைய குற்ற வழக்குகள் இருந்து வந்த காரணத்தினாலும் அவர் யாரோ நபர்களால் தாக்கப்பட்டு அவருக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்து முதல் எதிரி பாஸ்கரன் மீது அவர் கொண்டிருந்த முன்விரோதம் காரணமாக இந்த வழக்கு புகாரை கொடுத்துள்ளார் அதனை சரிவரப் புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது நான் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறாகும். நான் சொன்னது போல் எந்த ஒரு சாட்சியம் எந்த ஒரு வாக்குமூலமும் என்னிடம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

ஒப்பம் 3/2/2026.

Typewritten by the Typist in Open Court to my dictation and to my hearing read over and typograped to the witness and acknowledged by him / her to be correct.

3/2/26

Prl. Subordinate Judge
Kancheepuram.